**ஆணமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆணமடுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நூல்நிலையத்திற்கான புத்தகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் புத்தகங்களை அகற்றுதல்களில் நிகர வித்தியாசம் ரூபா 191,544 ஆக இருந்த போதிலும், 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பேரேட்டு குறிப்பு இலக்கம் 40 படி புத்தக கணக்கிற்கு ரூபா 366,470 ஆக பற்று வைக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் மாற்றங்கள் உரிய முறையில் கணக்கிடப்பட வேண்டும். | 2019ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்யப்படுமென தெரிவித்துக் கொள்கிறோம். |
| (ii) | சபையில் பராமரிக்கப்படும் புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளின்படி 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 1,068,339 ஓய்வூதிய | கணக்கை சரி செய்து கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பேரேட்டுக் குறிப்புகள் மூலம் சரி செய்யப்படுமென |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கின் நிலுவையாக இருந்தும், நிதி அறிக்கைகளின் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் ரூபா 1,157,371 வரை இருப்பதன் மூலம் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 89,032 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது. | | தெரிவித்துக் கொள்கிறோம். |
| (iii) | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கைத்தொழில் கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள கம்மன்தலுவ கல்குலம நீர் திட்டத்திற்காக (2 கட்டம்) ரூபா 183,940 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பேரேட்டுக் குறிப்புகள் மூலம் சரி செய்யப்படுமென தெரிவித்துக் கொள்கிறோம். |
| (iv) | 2018ஆம் ஆண்டு யூலை 25 ஆம் திகதிய 589 ஆவது இலக்கத்தைக் கொண்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் பிடி காசான ரூபா 2,222,681 மீண்டும் செலுத்தப்பட்டாலும் மீண்டும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் அது கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பேரேட்டுக் குறிப்புகள் மூலம் சரி செய்யப்படுமென தெரிவித்துக் கொள்கிறோம். |
| (v) | மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்படாத பசுமை அருணலு செயற்திட்டத்திற்காக ரூபா 15,000 உம் வெற்றியடையாத உயிர்வாயு அலகை நிர்மாணிக்க ரூபா 70,000 உம் உள்ளடங்களாக ரூபா 85,000 கடன்பட்டோராக கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## (ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### i) பெற வேண்டிய கணக்குள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளபடியான பெற வேண்டிய 05 கணக்குகளின் நிலுவையாக ரூபா 25,240,244 ஆக இருந்த அதேவேளை, அதில் 05 வருடங்களை தாண்டிய கணக்குகளின் நிலுவைகளின் கூட்டுத்தொகை ரூபா 741,723 ஆக இருந்தது. | பெற வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு காணப்பட்ட நிலுவையாகவுள்ள வரிப் பணத்தின் நிலுவையான ரூபா 589,457 உம் நிலுவையாகவுள்ள ஏக்கர் வரி மூலம் ரூபா 12,780 உம் பொதுவான கடனாளிகளிடமிருந்து ரூபா 539,346 உம் மற்றும் கைத்தொழில் கடனாளிகளிடமிருந்து ரூபா 10,853,391 உம் 2019 ஏப்ரல் வரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மீதித் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

### (ii) செலுத்த வேண்டிய கணக்குள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய 02 கணக்குகளின் நிலுவைகளின் கூட்டுத் தொகையான ரூபா 24,663,870 ஆக இருந்த அதேவேளை அதில் 05 வருடங்களை தாண்டிய கடன் கொடுத்தோர் ரூபா. 301,848 ஆக இருந்தது. | செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் துரிதமாக தீர்க்கப்பட வேண்டும். | பொதுவான கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 2,536,832 உம் மற்றும் கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 9,125,514 உம் 2019 ஏப்ரல் மாதமளவில் செலுத்தப்பட்டுள்ள அதேவேளை, மீதியாகவுள்ள நிலுவைகளை துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்வுக்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேர்க்கப்பட்ட பெறுமதியான ரூபா 220,794,903 ஆக இருந்த கணக்குகளின் விடங்கள் 12 இற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இறுதி கணக்காய்வுடன் கணக்குளின் மீதிகளை உறுதிப்படுத்தப்படும் படடோலைகளை சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 வருட இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது அனைத்து கணக்காய்வு சான்றுகளையும் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** 1988 பிரதேச சபை (நிதி மற்றும் பரிபாலனம்) சட்டம் | | | |
| 33 ஆம் விதி | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வரி செலுத்த தவறும் நபர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்காமை | நிலுவையில் உள்ள வரிப் பணங்கள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | வரி மதிப்பீட்டு பகுதியின் வரைபடம் இல்லாததால் இவ்வாறு 2018 ஆம் ஆண்டில் சொத்துக்களை தடை செய்ய முடியாது போன அதேவேளை, நிலுவைத் தொகையை துரிதமாக |

வசூலிக்க நடவடிக்கை
எடுக்கப்படுமென
அறிவித்துக்
கொள்கிறேன்.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,294,563 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,180,393 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 5,761 | 3,413 | 2,259 | 7,441 | 5,113 | 5,015 | 3,663 | 6,287 |
| வாடகை | 17,698 | 9,017 | 8,831 | 2,025 | 14,159 | 10,840 | 10,384 | 1,839 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | | | | | | | |
| ஏனைய வருமானம் | 525 | 1,278 | 1,278 | --- | 1,438 | 1,005 | 1,005 | --- |
| | 14, 755 | 15, 219 | 19, 440 | 8, 442 | 15, 325 | 10, 337 | 10, 205 | 12, 663 |
| மொத்தம் | 38,739 | 28,927 | 31,808 | 17,908 | 36,035 | 27,237 | 25,257 | 20,789 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானம் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்கு பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேர்க்கப்பட்ட மற்றும் கடந்த வருடங்களில் நிலுவையாக உள்ள வருமானத்தில் சேர்க்கப்பட்டவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த வருடங்களில் நிலுவை வருமானத்துடன் பெற வேண்டிய | நிலுவையாகவுள்ள வருமானத்தை உடனடியாக | கடந்த ஆண்டு நிலுவையாகவுள்ள |

| | | |
|---|---|---|
| முழு வரிப் பணம் மற்றும் வரி வருமானத்தில் 23 சதவீதமும் கூலி வருமானத்தில் 81 சதவீதமும் ஏனைய வருமானங்களின் 70 வீத மதிப்பீடு வருடத்தில் சேகரிக்கப்பட்டுள்ளது. | வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானத்தை அறவிடுவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கிறோம். |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு ரூபா 6,287,000 ஆக நிலுவையாக இருந்த வீதவரி மற்றும் வரியானது, மீளாய்வாண்டில் ரூபா 7,741,031 ஆக 18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது மாத்திரமன்றி சபையினால் வரிப் பணம் சேகரிப்பது தொடர்பிலான பொறுப்பு உரிய முறையில் இடம்பெறவில்லை. | நிலுவை வீதவரி துரிதமாக அறவிடப்பட வேண்டும். | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிலுவையாக இருந்த வீதவரித் தொகையான ரூபா 589,456 ரூபா தற்பொழுது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கிறேன். எஞ்சியுள்ள மீதித் தொகை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படுமெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் 2017 வரையான காலப்பகுதிக்கான நிலுவையாகவுள்ள குத்தகை வாடகையான ரூபா 539,174 உம் 2015 ஆம் வருடத்திற்கு முன்னர் நிலுவையாகவிருந்த ரூபா 28,800 கடைக்கான கூலியும் இதுவரை வசூலிக்கப்படவில்லை. | இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி வெகு விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையாகவுள்ள ரூபா 539,174 ஆன நிலுவை குத்தகை வாடகையை அறிவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் உள்ள ரூபா 28,800 கடைக்கூலியை அறவிடுவதற்கு முடியாததனால் அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கிறோம். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா 7,343,502 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 11,695,742 தொகையான முத்திரைக் கட்டணமும் அறிவிடப்பட வேண்டியுள்ளது. | தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையாக இருந்த மீதி நீதிமன்ற தண்டப்பணமான ரூபா 4,381,167 உம் மற்றும் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணமான ரூபா 5,600,000 உம் அறிவிடப்பட்டுள்ள அதேவேளை, மீதியை துரிதமாக அறவிடப் போவதாகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 29 காரணங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | பிரதேச சபை அதிகாரசட்டத்தின் படி சபைக்குரிய உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தின் தேவைக்கமைய உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 வருடாந்த அபிவிருத்தி திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா 997,835 தொகையான 04 பணிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பஸ் தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 877,835 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 755,670 தொகை செலவினத் தலைப்பிற்கு மாற்றி பயன்பாட்டிற்கு எடுத்துள்ளதுடன், எஞ்சிய 03 வேலைகள் இடம்பெற்றிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு முதல் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கிறோம். |
| (ii) | 2018 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் ஐந்து நடவடிக்கைகளின் முன்னேற்றம் 03 முதல் 29 சதவீதம் வரை இருந்தது. | வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 வருடத்தில் கடன்பட்டோர் பட்டியலின் உள்ளடக்கப்பட்டுள்ளபடி முன்பள்ளி பாடசாலைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள், போதைப் பொருள் தடுப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ள அதேவேளை, எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வன்னம் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கிறேன். |

## (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச சபை அதிகாரத்தின் கீழ் உள்ள பகுதிகளில் நாளாந்தம் 2.5 டொன் அளவு கழிவுகள் சேகரிக்கப்படுகின்ற அதேவேளை, அதில் கொம்பேஸ் வேலைத்திட்டத்திற்காக ஒவ்வொரு நாளும் 1.8 டொன் அளவு பயன்படுத்தப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் விற்பனையாகிய மொத்த உரத்தின் அளவு 8260 கிலோ கிராமும் அதன் வருமானம் ரூபா 82,600 ஆகும். முன்னைய வருட வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 10,400 ஆக குறைவொன்றும் ஏற்பட்டுள்ளது. | திண்மக்கழிவு முகாமைத்துவம் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். | சபை வளாகத்தில் இருந்த கொம்போஸ்ட் பிரிவு சபைக்கு வெளியே உள்ள குருபொகுன பிரதேசத்திற்கு கொண்டு சென்ற காலப்பகுதியில் கொம்போஸ்ட் தயாரிப்பு இடம்பெறவிலலை. அக்காலப்பகுதியில் இதன் வருமானம் குறிப்பிடத்தக்களவு குறைந்ததாக தெரிவித்துக் கொள்கிறோம். தற்பொது விற்பனை அதிகரித்து வருமானமும் அதிகரித்துள்ளதாக தெரிவித்துக் கொள்கிறோம். |

## (ஈ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தியின் இலக்காக சுகாதார பாதுகாப்பு, நீர் வசதிகளை ஏற்படுத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், வீதி புனரமைப்பு, மக்களின் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பன அடையாளம் காணப்பட்டிருந்தும் அந்த இலக்குகளை அடைவதற்காக முன்னேற்றம் 75 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. | நிலையான அபிவிருத்தியின் இலக்கினை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலையான அபிவிருத்தியின் இலக்கை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், உடல் மற்றும் மனிதவளங்களின் பற்றாக்குறை காரணமாக இதன் முன்னேற்றம் 75 % குறைவடைந்து காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் இதன் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென மேலும் தெரிவித்துக் கொள்கிறோம். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் இரண்டாம் நிலை பதவிகளில் 13 பதவி வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் 10 வெற்றிடங்களும் இருந்த அதேவேளை, சாதாரண மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களுக்காக 13 பேர் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளிலிருந்து வெளியே வந்து சேவையாற்றினர். | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப தரத்தில் உள்ள 07 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ள அதேவேளை, சாதாரண மற்றம் மாற்று ஊழியர்கள் 13 பேர் மேலதிகமாக உள்ள அதேநேரம் தேவைக்கமைய கொம்போஸ்ட் பிரிவில் பணிபுரிவதற்கு இந்த ஊழியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த பதவிகளை நிரந்தமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறோம். |

### (ஆ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட ஊழியர் ஒருவரின் ரூபா 2,500 கடன் நிலுவையொன்று மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரினது ரூபா 9,441 கடன் நிலுவையொன்று 2012 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது காணப்படுகின்றது. | அறவிடப்பட வேண்டிய ஊழியர்களின் கடன்களை துரிதமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கடன் நிலுவைகள் பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |

### 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளை, இதுபோன்ற குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வன்னம் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 08 செலவின விடயங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,225,064 இல் எந்தப் பணமும் செலவிடப்படவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து உயர்ந்த பட்ச பிரதிபலன்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய அவசியமின்மை மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக கோரிக்கைகள் விடுக்காமை, வெற்றிடங்கள் காணப்படுவதனால் ஊதியங்களை வழங்காமை ஆகிய காரணங்களால் நிதி எஞ்சியுள்ளது. |